Registered as a NewsPaper 06 . விலை: ரூபா 5-00

ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்:- 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 சித்திரை 15 ( 27 - 04 - 1992 ) திங்கட்கிழமை ஓசை: 69

## மூதூரில் பரவியுள்ள புதுவித கண்ணோய்

மூதூர் பகுதியில் ஒரு விசித்திர கண்ணோய் பரவியிருப்பதாகத் தெரிவிக்கப் படுகிறது. அண்மையில் திருக்கோணமலை சென்றிருந்த ஒரு இந்திய மருத்துவ நிபுணர் இத்தகவலை வெளியிட்டுள்ளார். கண்ணோய்க்கு மக்கள் மருந்து வசதியில்லாது இருப்பதாகவும், உடனடியாக மருத்துவ உதவி மூதூருக்கு அனுப்பும் படியும் கேட்டுள்ளார்.

# புதியதீர்வுத்திட்டத்துடன் மீண்டும் யாழ். வருவோம்

## புலிகளிடம் பௌத்த குழு உறுதி

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளிடம் தாம சமர்ப்பித்த தீர்வுத்திட்டம் பல குறைபாடுகளைக் கொண்டிருப்பதாக ஒப்புக்கொண்ட பௌத்த நல்லெண்ணத் தூதுக்குழுவினர் தாம் மீண்டும யாழ்ப்பாணம் வரும் பொழுது ஒரு முழுமையான ஆக்க பூர்வ மான தீர்வுத் திட்டத்தை கொண்டுவருவதாக புலிகளிடம் உறுதியளித்தனர். இந்தப் புதிய தீர்வுத் திட்டம் தமிழரின் அடிப்படைப் பிரச்சினைகளை அணுகுவதாக அமைந்திருக்கும் என்றும் கூறினர்.

இன்று காலை மூன்றாவது கட்டமாக விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் பௌத்த குழு மாருக்கும் மத்தியில் நடைபெற்ற பேச்சுக்களின் போது பௌத்த குழு மேற்கண்டவாறு வாக்குறுதியை அளித்தது. யாழ்ப்பாணத்தைசுற்றிப பார்த்து, பல்வேறு பொது ஸ்தாபனங்களைச் சந்தித்து, தமிழ் மக்களின் பிரச்சினைகளை தாம் நன்குணர்ந்திருப்பதாகவும் இந்தப் புரிந்துணர்வின் அடிப்படையிலும் புலிகளின் நிலைப்பாட்டின் அடிப்படையிலும் புதிய யோசனைகளை தாம் சமர்ப்பிக்கவிருப்பதாக பௌத்த பிக்குகள் புலிகளிடம் எடுத்து விளக்கினர். மூன்றாம் கட்ட சந்திப்பு இரண்டு மணிநேரம்வரை நீடித்தது

இந்தப் பேச்சுக்களின் போது புலிகளின் சார்பில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு.மகேந்திரராசா, ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், புலிகளின் பிரமுகர் திரு. பாலகுமாரன், யாழ்.மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## வீரச்சாவு வீரவேங்கை புனிதன்

தீவகப்பகுதிஇராணுவத்தினர் மீது கடந்த 20 ஆம திகதி தமிழீழ விடுதலைப் புலிகள் திடீர் தாக்குதலொன்றை நடத்தினர். புலிகளின் இத் துணிகரத்தாக்குதலினால் இராணுவத்தினர் பலத்த இழப்பைச் சந்தித்துள்ளனர்.

இத் தாக்குதலில் வீரவேங்கை புனிதன் (நமசிவாயம் சிறிதரன் 4ஆம் வட்டாரம்

(6ஆம் பக்கம் பார்க்க)

## மூதூர் கிராமங்களில் மீண்டும் சுற்றி வளைப்புகள்

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மூதூர் பிராந்தியத்தில் கடந்த நான்கு நாட்களாக இராணுவச் சுற்றி வளைப்புகள் அதிகரித்துள்ளன.

மூதூரிலுள்ள இராணுவ முகாம்களிலுள்ள இராணுவத்தினர் திடீர் சுற்றி வளைப்புகளை மேற்கொண்டு பொது மக்களை கைது செய்து இராணுவ முகாமிற்கு கொண்டு செல்கின்றனர். அகதி முகாம்கள் மணிக்கொரு தடவை சோதனைக்கு உள்ளாக்கப் பட்டு வருகிறது.

மூதூர் பிராந்தியத்திலுள்ள அகதிமுகாம்களில் வயோதிபரும், பெண்களுமே வாழ்கின்றனர். இளைஞர்கள் ஏற்கனவே இராணுவத்தால் பிடித்துச் செல்லப்பட்டுள்ளனர்.

இப்பொழுது 30 வயதுக்கு மேற்பட்டோர் பலரும் இராணுவ முகாம்களுக்கு கொண்டு செல்லப்பட்டுளளனர்.

## மாந்தையில் கடும் மோதல்; ராணுவம் பின்வாங்கி ஓட்டம்

(மன்னார்)

மன்னார் மாவட்டம் மாந்தை சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து முன்னேறி வந்த இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் உக்கிர தாக்குதலை மேற் கொண்டு அவர்களை விரட்டியடித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன் தினம் இடம் பெற்றது. நேற்று முன்தினம் காலை 8 45 மணியளவில் மாந்தை இராணுவ முகாமிலிருந்து முன்னேறி வந்த இராணுவத்தினர் மீது முகாமிலிருந்து 500 யார் தூரத்தில் வைத்து விடுதலைப் புலிகள் தாக்குதலை ஆரம்பித்தனர்.

மோதல்கள் பலமணி நேரம் இடம்பெற்றன. இத்தாக்குதல்களின் போது முகாமிலிருந்தும் எறிகணைத்தாக்குதலும், துப்பாக்கிப் பிரயோகமும் மேற் கொள்ளப்பட்டது.

புலிகளின் தீவிர தாக்குதல்களுக்கு ஈடுகொடுக்க முடியாத

[6ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். மக்கள் நிலையை விளக்க பிரேமாவை பிக்குகள் சந்திப்பர்

தமிழ் மக்களின் அவல நிலையை சிறிலங்கா அரசிற்கும் சிங்கள மக்களுக்கும் எடுத்துக்கூறி தமிழ் மக்களின் துயர் துடைக்க தம்மாலான முயற்சிகளை எடுக்கப் போவதாகவும், சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவையும் மற்றும் முக்கிய அமைச்சர்களையும் சந்தித்து ஒரு போர்நிறுத்தத்தைக் கொண்டுவர ஆக்கபூர்வமான முயற்சிகளை மேற் கொள்ளப் போவதாகவும் பௌத்த நல்லெண்ணத் தூதுக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.

நேற்று நடைபெற்ற மூன்றாம் கட்ட சந்திப்பின்போது புலிகளின் பிரதிநிதிகளிடம் அவர்கள் இவ்வாறு எடுத்துக் கூறினர்.



யாழ். விஜயம் செய்த பௌத்த பிக்குகள்
விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட விசேட அதிரடிப் படைப்பிரிவினரின் பாதுகாப்புடன் யாழ். நகரைச் சுற்றிப் பார்த்த போது எடுக்கப்பட்ட படம்.

## தூதுக்குழு கொழும்பு திரும்பியது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கு நல்லெண்ண விஜயமொன்றை மேற்கொண்டு கடந்த புதன் கிழமை வந்த பௌத்த தூதுக் குழுவினர் நேற்று கொழும்பு திரும்பினர்.

நேற்று பகல் 2.00 மணிக்கு பலாலி விமானத் தளத்திற்குச் சென்ற இவர்கள் அங்கிருந்து விமானமூலம் கொழும்பு சென்றனர்.

தாம் கொழும்பு திரும்பியதும் வெளிநாட்டு, உள்நாட்டு

(6ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்



தபேந்தினி

வீரவேங்கை தபேந்தினி (பூபாலசுந்தரம்மஞ்சுளாதேவி மாமுனை செம்பியன்பற்று தாழையடி) நேற்று தற்செயலாக கடலில் மூழ்கி சாவைத் தழுவிக் கொண்டார். இவருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

# தபால் சேவைகளை பன்முகப்படுத்த நடவடிக்கை

தபால் சேவைகளை மாகாண மட்டத்தில் பன்முகப்படுத்த நடவடிக்கைகள மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மே மாதம் முதல் தேதி முதல் தபால் சேவைகள் மாகாண மட்டத்தில் பன்முகப்படுத்தப்படவுள்ளது ஒன்பது மாகாணங்களுக்கும் ஒன்பதுபிரதித் தபால் மாஅதிபர்கள் நியமனம் செய்யப்பட்டு இவர்களின் கீழ் சிரேட்ட நிர்வாக செயலாளர், கணக்காளர், பதிவாளர், தபால் சுப்றின்டன்ட் ஆகியோரும் நியமனம் செய்யப்படவுள்ளனர்.

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



**கப்டன் மோகன் மாஸ்டர்**
**(முருகேசு ஜெயக்குமார்)**
**(முன்னாள் நெல்லியடிப் பிரதேசப்பொறுப்பாளர்)**

| வீரப்பிறப்பு | வீரச்சாவு |
|---|---|
| 03. 05. 1962 | 27. 04. 1988 |

இன்றில்லை
நான் காண்டுகளுக்கு முன் நடந்த கதை,
எங்கள் இளம் வீரன் ''மோகன் மாஸ்டர்''
இதயமிலா இந்தியனால் உப்புக் கடல்
வெளியில் உயிர் தியாகம் செய்த கதை,
மண்ணின் புதல்வனே! மாவீரனே!
உனக்கு எம் அஞ்சலிகள்

இவருடன் வீரச்சாவு அடைந்த
லெப்டினன் முரளி, பட்சம் ஆகியோருக்கு
எமது வீரவணக்கங்கள்

மோகன் மாஸ்டர் வீதி,
சோழங்கன்,
கரணவாய் தெற்கு, கரவெட்டி

\- குடும்பத்தினர்

(2507)

## 6-ம் ஆண்டு வீர அஞ்சலி

| வீர ஜனனம் | | வீரச் சாவு |
|---|---|---|
| 18 — 10 — 1964 |  | 27 — 04 — 1986 |

**கடற்புலி தெய்வா**
**(ஐயாத்துரை சிவநாதன் மாதகல்)**

வேங்கையின் வீரனாக விண்ணதிரத் துப்பாக்கி
தாங்கையில் ஏந்தியுயர் தாயகம் காண்பதற்கு
தூங்காது தோள்கொட்டி தோழரெனும் வேங்கைகளுடன்
நின்னுயிரை நீத்தான் தெய்வா

இவருடன் வீரச்சாவை அணைத்த ஏனைய பதினொரு
புலிகளுக்கும் எமது வீர அஞ்சலியை செலுத்துகிறோம்

குடும்பத்தினர், உறவினர்
நண்பர்கள்

(சி-2504)

## வரி விளம்பரம்

### விசேட ஆங்கிலப் பயிற்சி

3 மாதத்தில் ஆங்கிலம் பேசுவதில் திறமை எய்துவதற்கு தற்கால இங்கிலாந்து முறையில் ஆங்கிலம் ( ENGLISH GRAMMAR, SPOKEN ENGLISH ) கற்பிக்கப்படுகிறது. வீ என் கந்தசாமி A I B. PART I (LONDON) INTER (LONDON) 87 திருநெல்வேலி றோட் (பாலத்திற்கு அண்மையில்) கொக்குவில்.

(2505)

### விசேட கொடுப்பனவு வழங்கப்படவில்லை

( மண்டைதீவு )

புதுவருடத்தைமுன்னிட்டுஇரு வாரங்களுக்கு (சனி,ஞாயிறு ) முழுநாள் திறந்து வியாபாரம் செய்த வர்த்தகர்கள் அனேகர் ஊழியர்களுக்கு விசேட கொடுப்பனவு இது வரையிலும் வழங்கப் படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இம் மேலதிகக் கொடுப்பனவை தொழில்சங்க பிரதிநிதிகளிடம் கொடுக்க வேண்டும் அல்லது ஊழியர்களிடம் கொடுத்து அவர்கள் கையொப்பமிட்ட உறுதிச்சீட்டை வடபிராந்திய வர்த்தக ஊழியர் சங்கத்திற்கு அனுப்பி வைக்குமாறு சங்க செயலாளர் பணிவான வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### இலவச வைத்திய சேவை

(மண்டைதீவு)

வடபிராந்திய வர்த்தக ஊழியர் சங்கத்தின் இலவச வைத்தியசாலை அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

வர்த்தக ஊழியர்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் இலவச வைத்தியசேவைவாரத்தில் மூன்று நாட்கள் (திங்கள், புதன்,வெள்ளி)பி.ப.3.00மணியில் இருந்து 6.00 மணி வரை நடைபெறும் சகல வர்த்தக ஊழியர்களும் இதைப்பயன் படுத்திக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (88)

### பெரியவர் கயிறிழுப்பு மக்கள் பரிதவிப்பு

(கொழும்பு)

பெரியவர் வேடிக்கைக்காக கயிறு இழுக்கும் போது சாதாரண பொதுமக்கள் அக்கயிற்றில் மாட்டுப்பட்டு பரிதவிக்கின்றனர்.

இவ்வாறு நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் வடக்கு-கிழக்கு யுத்தம் நீடிக்கப்படுவது குறித்து மக்கள் ஐக்கிய முன்னணி உறுப்பினர் பந்துல குணவர்தன வருத்தம் தெரிவித்தார்.

### பத்திரிகை அலுவலகம் சோதனை

(கொழும்பு)

கொழும்பில் நேற்றுக்காலை லக்தீவ பத்திரிகைக் காரியாலயம் புலனாய்வுப் பொலிசாரால் தீவிர பரிசோதனை செய்யப்பட்டது.

முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் உடுகம் பொல வெளியிட்ட சத்தியக் கடதாசி தொடர்பாக விபரங்களைப் பெறும் பொருட்டு லக்தீவ காரியாலயம் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுறது.

சத்தியக் கடதாசியை வழங்கியவர்கள் யார், ஆங்கிலத்திலிருந்த சத்தியக் கடதாசியை சிங்களத்தில் மொழி பெயர்த்தவர் யார், சத்தியக் கடதாசியில் இருந்த ஒப்பத்தை உடுகம்பொலவின் ஒப்பம் என்று உறுதி செய்தவர்கள் யார்என்றவிபரங்களைத்திரட்டவே இந்தப் பொலிஸ் நடவடிக்கை.

## நினைவு கூருகின்றோம்...
## 1992-04-27

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் தமிழீழக் கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**அர்ச்சுனா** (பொன்னுத்துரை மித்திரா - மட்டக்களப்பு.)

**லெப். கபில்** (இரா. பாலேந்திரன் - திருக்கோணமலை.)

**கப்டன் அலெக்ஸ்** (கந்தசாமி நித்தியானந்தன் - இல - 33, நித்தியானந்தன்வீதி, நல்லூர் வடக்கு.)

**2 -ம் லெப். ரங்கா** (சி. இராசகுமார் - ஊரிக்காடு, வல்வெட்டித்துறை.)

**2-ம் லெப். துரைக்குட்டி** (சிவகுருநாதன் இராசவடிவேல்- உதயசூரியன் ஒழுங்கை, வல்வெட்டித்துறை.)

**நளினன்** (சச்சிதானந்தன் பிரதாபனன் - நவாலி.)

**கார்த்திக்** (நடராஜா கார்த்திகேயன் - ஆதிகோயிலடி, வல்வெட்டித்துறை.)

**தெய்வா**( ஐயாத்துரை சிவநாதன் - மாதகல்.)

**காந்தன்** (சிவசுந்தரம் விஜயதாஸ் - கடற்கரை வீதி, வல்வெட்டித்துறை.)

**யேசு** (பத்மநாதபிள்ளை ரவீந்திரா - அலவெட்டி )

1987 ஆம் ஆண்டு யாழ். கோட்டைப் பகுதியில் காவல் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**ராஜன்** (ஆறுமுகம் ரட்ணராஜா - ஒட்டுமடம், யாழ்ப்பாணம்.)

1988 ஆம் ஆண்டு மட்டக்களப்பு, கட்டைப்பறிச்சான் பகுதியில் 'ஜெகாத் குழுவினர்' மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

**கலீல்** (கலீல் ரகுமான் - தோப்பூர், மட்டக்களப்பு.)

கரவெட்டி, கப்புது வெளியில் இந்தியப் படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**கப்டன் மோகன் மாஸ்ரர்** (முருகேசு ஜெயக்குமார் - சோழங்கன், கரணவாய் தெற்கு, கரவெட்டி.)

**2-ம் லெப். முரளி / சாள்ஸ்** (கந்தவனம் தவக்குமார் - கரணவாய்தெற்கு, கரவெட்டி.)

**பட்சம் / ஜவாகர்** (கதிர்காமநாதன் இராகவன் - கரவெட்டி மேற்கு.)

1991 ஆம் ஆண்டு ஆனையிறவில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

**இங்ஸ்லி** (பேரம்பலம் பாஸ்கரன் - 10/5, வீட்டுத் திட்டம், இரணைமடு, கிளிநொச்சி.)

**போல்** (முருகையா உதயகுமார் - பளை.)

**திலகன்** (ஆறுமுகம் காமராஜி - முருகண்டி, கிளிநொச்சி.)

**பீற்றர்** (குணரட்ணம் மோகனராஜ் - துணுக்காய்.)

**புவி** (நடராசா சிவலோகநாதன் - தென்னியம்குளம், துணுக்காய்.)

**கருணா** (சரவணன் சந்திரகுமார் - பரந்தன்.)

**சர்மா / சல்மான்** (சுப்பையா மனோகரன் - செல்வநகர், கிளிநொச்சி.)

**தியாகு** (பெருமாள் அரிச்சந்திரன் - ஸ்கந்தபுரம், கிளிநொச்சி.)

**கப்டன் றொசான்** (மாசில்லாமணி சேகர் - கிளிநொச்சி.)

**கிருபா** (கனகசுந்தரம் ரவிச்சந்திரன் முள்ளி வாய்க்கால்.)

**சுருளி** (விநாயகமூர்த்தி கந்தலிங்கம் - வற்றாப்பளை, முள்ளியவளை, முல்லைத்தீவு )

**வேதா** (ஆறுமுகம் ஞானச்சந்திரன் - கண்டாவளை, கிளிநொச்சி )

**இராமதாஸ்** (பாலசுப்பிரமணியம் - முருகண்டி, கிளிநொச்சி.)

**எல்பேட்** (தங்கவேல் கனகசுந்தரம் - உருத்திரபுரம், கிளிநொச்சி)

**முகிலன்** (இராமு குருநாதன் - மாங்குளம்.)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**விடுதலைப் புலிகள்**
**மக்கள் முன்னணி**

(சி/4334)

# தமிழர் தேசியப் பிரச்சினையும் விடுதலைப் புலிகளும்

“தென்னிலங்கையில் எத்தனையோ எதிர்ப்புகள், இடையூறுகள் மத்தியில் ஒரு சமாதான நல்லெண்ண விஜயத்தை மேற்கொண்டு நீங்கள் இங்கு வருகை தந்திருப்பதையிட்டு தமிழ் மக்கள் சார்பில் விடுதலைப் புலிகள் இயக்கம் முதலில் உங்களுக்கு பாராட்டைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறது. யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்ய நீங்கள் மேற்கொண்ட துணிகர முடிவை பாராட்டும் அதேவேளை உங்களது வருகை இரு தேசிய இனங்கள் மத்தியிலும் சமாதானம், நல்லெண்ணம், புரிந்துணர்வு ஆகியவற்றிற்கான கதவுகளை திறந்துவிடுமென நாம் நம்புகிறோம்.

நான்கு தசாப்தங்களுக்கு மேலாக தமிழீழ மக்களின் தேசியப் போராட்டம் ஒரு நீண்ட வரலாற்றைக் கொண்டிருந்த போதும் தமிழரின் தேசியப் பிரச்சினையின் அடிப்படைகளை மறந்துபட்ட சிங்கள மக்கள் இன்னும் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்பது மிகவும் வேதனைக்குரிய ஒரு விடயமாகும். அத்துடன் ஆயுதப் போராட்டத்தின் வரலாற்றுத்தோற்றம், அதற்கான காரணிகள்போன்றனவும் இன்னும் புரிந்து கொள்ளப்படவில்லை. இவற்றிற்கும் மேலாக ஆயுதப் போராட்டமானது ஒரு புரட்சிகரமான விடுதலைப் போராட்டவடிவம் பெற்றிருப்பதையும்சிங்கள வெகுசனம் இன்னும்உணர்ந்ததாக தெரியவில்லை. நீண்டவரலாறு உடையதும், சிங்கள அரசியல் உலகத்தை ஆட்டிப்படைப்பதுமான பேரினவாதமே இத்தகைய விளங்கமுடிந்த தன்மைக்கு காரணமாக அமைந்திருக்கிறது

பௌத்த மதமானது ஒரு ஆழமான தார்மீக தத்துவத்தைப்போதிக்கிறது. மனிதநேயத்தையும் காருண்ணியத்தையும் போதிக்கிறது. சமத்துவத்தையும்சமூகநீதியையும்போதிக்கிறது. இப்படியான ஒரு உன்னதமான ஆன்மீக தரிசனத்திலிருந்து ஒரு பிற்போக்கான பேரினவாதச் சித்தாந்தம் பிறப்பெடுத்து. அரசியல் உலகத்தை ஆக்கிரமித்து. தமிழருக்கு எதிரான ஒடுக்குமுறை வடிவங்களாக பேயுருவம் பெற்றிருக்கிறது. புத்தபெருமானின் ஆன்மீகப் பாதையில்அந்த மாபெரும் ஞானியின் அறநெறித் தர்மத்தில இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக ஊறி வளர்ந்த பௌத்த சமுதாயத்தில் மனித நேயமற்ற வன்முறை அரசியல் தாண்டவமாடுவதன் காரணம் என்ன என்பதை நாம் ஆழமான முறையில் சிந்தித்துப் பார்க்க வேண்டும்

சிங்கள அரச வன்முறையினதும், ஒடுக்குமுறையினதும் நேரடி விளைவாகவே தமிழரது ஆயுதப் போராட்டம் பிறப்பெடுத்தது என்பதை நாம் இங்கு வலியுறுத்த விரும்புகிறோம். வாழும் உரிமை மனிதனின் அடிப்படை உரிமை இந்த வாழும் உரிமையை பாதுகாத்துக் கொள்ளவே நாம் ஆயுதங்களை ஏந்தினோம். சாத்வீக பாதையில், நீண்ட நெடுங்காலமாக எமது மக்கள் மேற்கொண்டு வந்த அகிம்சைப் போராட்டங்கள் அரசின் ஆயுத வன்முறையால் நசுக்கப்பட்டது. அரச பயங்கரவாதம் கட்டுக்கடங்காமல் தீவிரமடைந்து இன அழிப்பு வடிவமாகப்பூதாகரம் பெற்ற போது நாம் எம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக ஆயுதங்களை ஏந்தினோம். எம்மைப் பாதுகாக்க எமக்கு வேறுவழி இருக்கவில்லை அரசின் அடக்குமுறையிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் உரிமை எமது மக்களுக்கு உண்டு. எனவே தற்பாதுகாப்பிற்காக ஆயுதம் ஏந்திப் போராடுவது நியாயமானது மட்டுமல்லாது ஒரு அத்தியாவசிய தேவையுமாக அமைந்தது.

விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு பயங்கரவாத அமைப்பு அல்ல நாம் அர்த்தமற்ற ஆயுதப் போரை நடத்தும் வன்முறையாளரும் அல்லர். விடுதலைப் புலிகள் ஒரு தேசிய விடுதலை இயக்கம் ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைக்காகப் போராடும் ஒரு புரட்சி இயக்கம். எமது ஆயுதப் போராட்டமானது ஒரு அரசியல் போராட்டமாகும். ஒரு குறிப்பிட்ட அரசியல் இலட்சியத்திற்காக நாம் போராடி வருகிறோம்.

> யாழ்ப்பாணம் விஜயம் செய்த பௌத்த நல்லெண்ண தூதுக் குழுவினரிடம் விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவு கையளித்த அதிகாரபூர்வமான அறிக்கையை இங்கு எமது வாசகர்களுக்கு தருகிறோம்.

இந்தக் கண்ணோட்டத்துடன்தான் விடுதலைப் புலிகளை புரிந்து கொள்ள முயற்சிக்க வேண்டும் இந்தக் கண்ணோட்டத்துடன் பார்க்கத் தவறினால் தமிழரின் தேசிய விடுதலைப் போராட்டத்தை புரிந்து கொள்ள முடியாது.

விடுதலைப் புலிகள் யார்? அவர்களது அமைப்பு எப்படிப்பட்டது? அவர்களது அரசியல் நோக்குகள், குறிக்கோள்கள் என்ன? என்பது பற்றி பரந்துபட்ட சிங்கள வெகுசனம் மத்தியில் பரவலாக அறியாமை நிலவுவது எமக்கு கவலையையும் வேதனையையும் தருகிறது. தென்னிலங்கை அரசியல்வாதிகள் பௌத்த குருமார் பத்திரிகையாளர்கள் மத்தியில் புலிகள்பற்றி ஒரு தவறான உண்மைக்குமாறான பார்வை நிலவிவருகிறது. புலிகளின் ஆயுதப்போராட்டத்தை ஒரு அப்பட்டமான பயங்கரவாதம் என்றும் புலிகளை பயங்கரவாதிகள் அராஜகவாதிகள் அதிதீவிரவாதிகள் என்றும் இவர்கள் தவறாக மதிப்பீடுசெய்கிறார்கள் இப்படியான தவறாக கண்ணோட்டமும் எதார்த்திற்கு மாறான மதிப்பீடுகளும் தமிழரின் தேசிய இனப்பிரச்சினையை புரிந்துகொள்வதற்கு ஒரு பெரிய முட்டுக்கட்டையாக அமைந்திருக்கிறது இந்த தவறான மதிப்பீடுகளுடன் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண முடியாது.

தமிழ் மக்களின் பிரச்சினை ஒரு தேசியப்பிரச்சினை என்பதையும் தேசிய சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலேயே எமது மக்களின் போராட்டம் அமையப்பெற்றுள்ளது என்பதையும் நாம் தெட்டத்தெளிவாக எடுத்துக் கூற விரும்புகிறோம் இந்த சுயநிர்ணய உரிமைப்போராட்டமானது நீண்ட வரலாற்றுப் புறநிலைகளால் பரிணாமம் பெற்றது தமிழ் மக்கள் ஒரு தேசிய இனமாக அமையப்பெற்றுள்ளனர் என்பதும் அவர்களுக்கு வரலாற்று ரீதியாக அமையப்பெற்ற தெளிவாக வரையறுக்கப்பட்ட எல்லைகளையுடைய ஒரு தாயகம் உண்டு என்பதும் எவரும் மறுக்கமுடியாத ஒருஎதார்த்த உண்மை.

ஆகவே தமிழ் மக்களை ஒரு தேசியமாக அங்கீகரித்து, அவர்களது தாயகத்தையும் தேசிய சுயநிர்ணய உரிமையையும் ஏற்றுக்கொண்டு இவற்றின் அடிப்படையில் ஒரு தீர்வுத் திட்டம் வகுக்கப்படுவதே ஒரு ஆக்கபூர்வமான தீர்வுக்கு வழிகோலும் என்பது எமது நிலைப்பாடாகும்,

தமிழரின் பிரச்சினை குறித்து ஓர் தீர்வுத்திட்டத்தை நீங்கள் தயாரித்து எமது பரிசீலனைக்கு முன்வைத்ததை இட்டு நாம் மகிழ்ச்சி தெரிவிக்கின்றோம் ஆயினும் இத்தீர்வுத்திட்டம் தமிழரின் தேசிய பிரச்சினையின் சிக்கலான பரிமாணங்கள் எதையும் தொட்டு நிற்கவில்லை நீங்கள் முன்வைத்த அகில இலங்கை தழுவிய சகல இனங்களுக்கும் பொதுவான சிறிலங்கா தாயகக்கோட்பாட்டை நாம் அங்கீகரிக்க முடியாது. ஏனென்றால் இந்தக் கோட்பாடு வரலாற்றுப்புறநிலை உண்மையை மறுக்கின்றது. வரலாற்று ரீதியாக தமிழருக்கே உரித்தான ஒரு தாயக பூமியைநிராகரிக்கிறது நீங்கள் முன்வைத்ததிட்டத்தின் ஒவ்வொரு யோசனையையும் ஆராய்ந்து விமர்சிப்பது அவசியமில்லை. உங்களது தீர்வுத்திட்டமானது தமிழரின் அடிப்படைக் கோரிக்கைகளையும் அவர்களின் அரசியல் அபிலாசைகளையும் பூர்த்தி செய்யத் தவறிவிட்டது என்பதை மட்டும் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

---

## காபூலின் பாதுகாப்புப் பொறுப்பு கெரிலாக் குழுத் தலைவரிடம்

(காபூல்)

காபூல் நகரின் பாதுகாப்புப் பொறுப்பைக் கெரில்லாப் படைகளின் பிரதம தளபதியான அகமட் ஷா மசூத் பொறுப்பேற்றுள்ளாரென காபூல் தொலைக்காட்சி நேற்று முன்தினமிரவு அறிவித்தது.

ஆப்கானிஸ்தானின் இராணுவ ஆட்சி கலைக்கப்பட்ட பின்னர் நேற்று முன்தினமிரவு காபூல் நகரைக் கைப்பற்றிய இஸ்லாமியப் புரட்சி பற்றிய முதலாவது அறிக்கையைக் காபூல் தொலைக்காட்சி வழமையான தனது நிகழ்ச்சிகளுக்குப் பின்னர் வெளியிட்டது

இவ் அறிக்கை தொலைக்காட்சியில் வாசிக்கப்பட்டுக் கொண்டிருந்த அதேவேளை, வெற்றிவாகை சூடிய கெரில்லாக்கள் ஆகாயத்தை நோக்கித் துப்பாக்கி வேட்டுகளைத் தீர்த்து மகிழ்ச்சிகொண்டாடினர். ஆயுதப் படைகள் இஸ்லாமிய அரசாங்கத்தை வரவேற்பதாகவும், புதிய முஜாகுதீன் கெரில்லாக்களுக்கு எல்லா ஆயுதப்படை வீரர்களும் கட்டுப்பட வேண்டுமெனவும் ஆப்கான் இராணுவத்தின் உயர்மட்ட அதிகாரி ஒருவர் விடுத்த வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டுள்ளது,

## ஆப்கான் அரச இராணுவம் நிராயுதபாணியாக்கப்பட்டது

(காபூல்)

அகமட் ஷா மசூத் இற்கு விசுவாசமான கிளர்ச்சியாளர்கள் ஆப்கான் அரச இராணுவத்தினரை முற்றிலும் நிராயுதபாணிகளாக்கியுள்ளனர் என காபூலில் இருந்து வரும் செய்திகள் கூறுகின்றன. பெரும்பாலும் ஒரு குண்டு கூட வெடிக்கப்படாமல் பிரதான மையங்கள் வீழ்ந்து விட்டன எனத் தெரிகிறது.

குல்புதின் கேக் மத்தியார் தலைமையிலான குழுவிடம் சில கட்டடங்களும் உள்துறை அமைச்சகமும் சிக்கியுள்ளன. முன்னர் அரசுக்கு ஆதரவாக இருந்த ரசூத் தோசின் தலைமையிலான குழுவும் ஷா மசூத் தலைமையிலான படைகளுடன் சேர்ந்து கொண்டு தொலைக்காட்சி மற்றும் வானொலி நிலையங்களை வசப்படுத்திக் கொண்டிருப்பதாகத் தெரியவருகின்றது. எனினும் வானொலி, தொலைக்காட்சி சேவைகள் எதுவும் பாதிக்கப்படவில்லை.

## காபூலில் அரசு அமைக்க கேக் மத்தியார் முயற்சி

(காபூல்)

எல்லாக் கிளர்ச்சிக் குழுவுடனும் இணைந்து அவர்களது ஒத்துழைப்புடன் புதிய இடைக்கால அரச சபையொன்றை அமைக்கப் போவதாகவும், அந்த அரசு ஒரு ஆண்டுக்குள் பொதுத் தேர்தலை நடத்தும் எனவும் கேக் மத்தியார் அறிவித்துள்ளார்

பிடிவாதம் மிக்க கிளர்ச்சிக் குழுத் தலைவர் என வர்ணிக்கப்படும் கேக் மத்தியார், கடந்த வெள்ளிக்கிழமை அமைக்கப்பட்ட இடைக்கால சபையில் சேர்வதற்குத் தயக்கம் காட்டி வந்தமை தெரிந்ததே. இப்போது அவர் தமது ஆட்சி அமைக்கும் முயற்சிக்கு ஆதரவு காட்டுமாறு எல்லாக் கிளர்ச்சிக் குழுக்களுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## பொலிசார் மீது முதல்வர் கண்டனம்

(லூதியானா)

பஞ்சாப் மநிலத்தின் இன்றைய நிலைமைக்கு மாநிலப் பொலிஸார்தான் காரணம் என்று பஞ்சாப் முதல்வர் பியாந்த் சிங் கூறியுள்ளார். லூதியானாவிலிருந்து நாற்பது மைல் தொலைவில் உள்ள கிராமம் ஒன்றில் நடந்த பொதுக் கூட்டமொன்றில் பேசிய அவர் மேலும் கூறுகையில் அச்சத்தைக் கைவிட்டு அப்பாவி மக்களின் படுகொலைகளைக் கண்டிக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

## புலிகளின் தலைவர் குறித்து அரசின் நிலைப்பாடு வெளியிடப்படவேண்டும்

இந்தியா பிரபாகரனை கேட்டதா? பிரபாகரனை அரசு ஒப்படைக்குமா? இந்த விபரங்களை அரசு தெளிவாக வெளியிட வேண்டுமென ஐ. சோ. மு. எம். பி. நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்

பேருவளையில் ஜனாதிபதி ஆர். பிரேமதாசா ஆற்றிய உரையில் தம்பி குழப்பம் விளைவித்தால் அண்ணன் அவனை அயல் வீட்டாரிடம் ஒப்படைக்க மாட்டான்என்று கூறியிருப்பது பிரபாகரனை இந்தியாவிடம் ஒப்படைப்பதில்லை என்பதாகும் என இந்திய எம். பி சுப்பிரமணியம் தெரிவித்திருக்கிறார்.

இது விடயத்தை அரசு தெளிவு படுத்த வேண்டும். மேலும் இனப்பிரச்சினைக்கு தீர்வை எங்களிடம் கேட்காதீர்கள் பாராளுமன்றத் தெரிவுக் குழுவிடம் கேளுங்கள் என ஜனாதிபதி கூறுகிறார். இது விடயத்திலும் அரசின் நிலைப்பாடு தெளிவாக முன்வைக்கப்பட வேண்டும்,

சர்வகட்சி மாநாடும் சர்வகால மாநாடு போல் நீடிக்கிறது எனவும் தெரிவித்தார்.

## புலிகள் மீது தடை இந். மந்திரிசபை ஆராயும்

(டில்லி)

புலிகள் அமைப்பைத் தடை செய்வது பற்றி ஆலோசனை செய்வதற்காக இந்திய அமைச்சரவை விரைவில் கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது. இது தொடர்பாகஇந்தியவின் சட்டத்துறை, உள்விவகார அமைச்சுக்களினால் தயாரிக்கப்பட்ட குறிப்புகள் அங்கீகாரத்திற்காக ஏற்கனவே அமைச்சரவையின் பரிசீலனைக்கு விடப்பட்டுள்ளது எனவும் தெரியவருகிறது. புலிகள் அமைப்பு சட்டபூர்வமாகத் தடை செய்யப்பட்டால் அது பின்னணித்தளமாக இந்தியாவை பயன்படுத்துவதை தடுப்பதற்கான தெளிவான குறியீடாக இருக்கும் என்று இந்திய அரசின் உயர்மட்டங்களில் கருத்து நிலவுகிறதாம்.

## பஸ்ஸில் குண்டுவெடிப்பு பயணிகள் பத்துப்பேர் காயம்

(டில்லி)

புதுடில்லியின் செங்கோட்டைக்கு அருகே புதுடில்லிப் போக்குவரத்துக் கழக பஸ் வண்டியில் நேற்று முன்தினமிரவு குண்டு ஒன்று வெடித்தமையால் பயணிகள் பத்துப் பேர் படுகாயமடைந்தனர். நேத்தாஜி சுபாஸ் வீதியில் நேற்று முன்தினமிரவு எட்டரை மணியளவில் இக் குண்டு வெடிப்பு நேரிட்டது என இந்தியப் பொலிசார் கூறியுள்ளனர்.

# மேநாள்-1992

## மே-1

## பேரணியும் பொதுக்கூட்டமும்

அன்பார்ந்த மக்களே!

**உயிர்காப்பு மருந்துகள் இல்லை**
**சேவைக்கு வைத்தியர் இல்லை**
**பெயரிற்கு அத்தியாவசிய சேவை**
**மார்க்கமின்றி மடியுது மக்களின் தேவை**

இருட்டறையுள் மருத்துவத்தைத் தேடுகின்றோம்
வகையின்றி வழியின்றி வாடுகின்றோம்

நேசத்துக்குரியவர்களே!

நீங்கள் துன்பத்தில் குளித்தவர்கள்
துயரத்தில் துடித்தவர்கள் - இருப்பினும்
துவண்டு விடாதீர்கள் திரண்டு வாருங்கள்
உரக்கக் கத்துங்கள் உங்கள் அவலத்தை
உலகம் விழிக்கட்டும் உறக்கம் கலையட்டும்

## எதிர்வரும் மேதினம் எங்களுக்காகட்டும்

பேரணி ஆரம்பமாகும் இடம்: மருதனார்மடம் சந்தி

கூட்டம் நடைபெறும் இடம்: யாழ்.பல்கலைக்கழகம்

நேரம் பிற்பகல் 2 மணி

பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலையும் சுகாதாரசேவைப்பணியகமும்

(2506)

## சிந்தனைக்கு

மேதமை, ஆற்றல், அற்புதம் அனைத்தும் துணிச்சலில் அடங்கியுள்ளது.

— யொஹன் கேத்தெ

ஈழநாதம்

81, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 27-04-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 023-2839 நிர்வாகப்பகுதி 2808
த. பெ. எண் 00

# தொடரும் போராட்டம்

"நான் 1975 ஆம் ஆண்டு இங்கு வந்திருந்த போது ஓடிவிளையாடித் திரிந்த சிறுவர்கள் எல்லாம் இன்று ஆயுதங்களைத் தாங்கி அரசிற்கெதிராய் யுத்தம் செய்து கொண்டிருக்கின்றார்கள். பிரச்சினையை தீர்க்காமல் அரசு காலம் கடத்தி வந்தமையே இந்த நிலைக்குக் காரணம். தொடர்ந்தும் பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் இருக்குமேயானால், இப்பொழுது சிறுவர்களாக ஓடித்திரியும் இளந்தலைமுறையும் ஆயுதம் தாங்கி அரசிற்கு எதிராய் யுத்தம் செய்வதைத் தவிர்க்க முடியாத நிலை ஏற்படும்" இவ்வாறு பௌத்த பிக்குகளின் நல்லெண்ணத் தூதுக்குழுவின் தலைவர் வண. வலப்பிட்டிய சிறி சிட்டாதிய மகாநாயக்க தேரோ யாழ். செயலகத்தில் பேசும் போது தெரிவித்தார்.

தேரோவின் இக்கூற்று எமக்கும் ஏற்புடையதே. தமிழர் தேசிய இனப்பிரச்சினையை தீர்க்காமல், காலத்திற்குக் காலம் ஆட்சியில் மாறி மாறி அமர்ந்த ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கமும், சுதந்திரக்கட்சி அரசாங்கமும் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பதிலாக, மேலும், மேலும் பிரச்சினை கூர்மை அடைவதற்கும், அகிம்சைப் போராட்டம் ஆயுதப் போராட்டமாக மாறுவதற்குமே வழிவகுத்தன. எமது கடந்த காலத் தலைமுறைகள் அகிம்சை வழியில் போராடினார்கள். ஆனால், சிங்கள அரசாங்கங்கள் அவற்றைக் கண்டு கொள்ளவில்லை.

அவர்கள் அன்று அதைக்கவனத்திற் கொண்டிருப்பார்களானால் 1975 இல் விளையாடித் திரிந்த இன்றைய தலைமுறை ஆயுதம் ஏந்தியிருக்காது. ஒரு நீண்ட போர் ஏற்பட்டுமிருக்காது.

ஆனால், இன்னும், இவ்வளவு இரத்தம் சிந்திய பிறகும், சொத்துக்கள் அழிக்கப்பட்ட பின்னரும் கூடச் சிறிலங்கா அரசாங்கம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முயற்சிப்பதாகத் தெரியவில்லை. ஒரு இனத்தின் உரிமைக்காக எழுந்த போராட்டத்தை இராணுவ ரீதியாக வெற்றி கொண்டு விடலாம் என அரசாங்கம் எண்ணுகிறது ஆனால், இது ஒரு போதும் சாத்தியப்படப் போவதில்லை. ஏனெனில், டாங்கிகளும், விமானங்களும் ஒரு இனத்தின் உணர்வை அழித்து விடக் கூடியவையல்ல.

1975 இல் ஒரு சிலரைக் கொண்டிருந்த விடுதலை இயக்கம் இன்று பல்லாயிரம் இளைஞர்களையும், யுவதிகளையும் கொண்டுள்ளது. இராணுவத் தீர்வைத் தீவிரமாக்கியதால் போராட்டம் தீவிரமடைந்ததே ஒழிய அழிந்து விடவில்லை. எதிர்காலத்திலும் இந்நிலையே தொடரும் என்பதில் சந்தேகமில்லை அதேவேளை போராட்டத்தின் வளர்ச்சிப் போக்கில் எதிர்கால இளைய தலைமுறையினர் அதாவது இன்று விளையாடித் திரியும் சிறுவர்கள் மட்டுமல்ல சகல தமிழ் மக்களுமே போராட்டத்தில் ஈடுபடும் நிலையே உருவாகும். ஏனெனில் தற்பொழுது போராடும் இளைய தலைமுறையினரே எதிர்காலத்தில் முதியவர்களாகையால் போராட்டத்தில் அவர்களின் பங்கு தவிர்க்க முடியாததாகும். முதியவர்களில் ஒரு பகுதியினர் இன்றே போராட்டத்தில் இறங்கிவிட்டனர்.

இதேவேளை பெரும் இராணுவப்படை எடுப்பாலும் படுகொலைகளினாலும், சிலவேளை எதிர்பாராத விதமாக போராட்டம் பலவீனப்படினும் எதிர்பார்த்த மாதிரி இனப்பிரச்சினையை சிங்கள அரசாங்கம் தீர்த்துவிட முடியாது. ஏனெனில், இது ஓர் இனத்தின் தேசிய இனப் போராட்டமாகையில், சிறிது காலத்திற்குள் அது தமது இழப்புக்களைச் சுதாகரித்துக் கொள்ளும், இந்நிலையில், தமிழ் மக்களின் நியாய பூர்வமான உரிமைகள் வழங்கபபடாவிடில் மீண்டும் போராட்டம் தொடர்வதும் விரிவடைவதும் தவிர்க்க முடியாது, தடுக்கவும் முடியாது.

இந்நிலையில் யுத்தம் நிறுத்தப்பட வேண்டும். அடுத்த தலைமுறையும் ஆயுதம் ஏந்தாமல் தவிர்க்கப்பட வேண்டுமானால், தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும். தமிழரின் உரிமைகளுக்கு எப்பொழுது பாதுகாப்பு எனக்கருதப்படுகின்றதோ அப்பொழுதே போராட்டம் ஓயும். அதாவது தமிழ் மக்கள் தமது சொந்த மண்ணில் நிம்மதியாக பாதுகாப்பாக வாழ எப்போது முடியுமோ அதுவரை போராட்டம் தொடரும். இதில் ஒரு தலைமுறை என்ன பல தலைமுறைகளும் தொடர்ந்து ஈடுபடும். ஏனெனில் இது தமிழரின் தேசிய விடுதலைப் போராட்டம். அவர்கள் வாழ்க்கைக்கான போராட்டம்.

# புனர்வாழ்வு கொடுப்பனவு ஒன்றரை வருடமாக இல்லை

வீரமுனை, சொறிக்கல்முனை பகுதிகளில் உயிரிழந்த மற்றும் காணாமல் போன 300 பேருக்கு மேற்பட்டோருக்கும், கல்முனைப் பகுதிகளில் உயிரிழந்த காணாமல் போன 340க்கும் அதிகமானோருக்கும் காரைதீவு பகுதியில் காணாமல் போன உயிரிழந்த 140க்கு மேற்பட்டோருக்கும் ஆன மரணச் செலவு நிதி மற்றும் இறந்தோருக்கான புனர்வாழ்வுக் கொடுப்பனவுகள் ஆகியன ஒன்றரை வருடம் கழிந்தும் இதுவரை வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ள புதிய சுற்று நிருபத்தின்படி மூன்று மாதங்களுக்குள் மரண அத்தாட்சிப் பத்திரம் வழங்கப்பட்டாக வேண்டும். ஆனால் இது இந்த மாவட்ட மக்களுக்கு இதுவரையும் வழங்கப்படவில்லை. சிங்களவர் எங்காவது வன்செயலில் இறந்தால் மூன்று மாத காலத்துள் மரண அத்தாட்சிப் பத்திரம் வழங்கப்படுவதோடு நிவாரணமும் வழங்கப்படுகின்றது

1986-2-19 இல் இம் மாவட்ட உடும்பன் குளத்தில் கொல்லப்பட்ட 96 பேருக்கான நிவாரணக் கொடுப்பனவுகள் இன்னமும் வழங்கப்படவில்லை யெனவும் 1991-7-22 இல் மின்னொழுக்கால் பாத்திமா கல்லூரி அகதி முகாமில் கொல்லப்பட்ட எட்டுப் பேருக்கும் இறந்தோருக்கான நிவாரண கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை யெனவும் இது விடயத்தில் அரச அதிபரிடம் வினவிய போது திறைசேரியில் இருந்து பணம் வரவில்லை யெனத் தெரிவிக்கப்படுகிறது.

வீரமுனையில் மாத்திரம் 150 குடும்பங்கள் தலா 2500 ரூபாவுடன் மீளக்குடியமர்த்தப்படுகின்றனர். ஆனால் இவர்களது பாதுகாப்புக்கு உத்தரவின்றி மீளக் குடியமர்த்தப்பட்டுள்ள இம் மக்களுக்கு தொழில் அச்சுறுத்தல் காணப்படுவதாகவும் எந்தத்தொழிலும் செய்ய முடியாத நிலையிலுள்ளனர்.

மேலும் அகதிகளுக்கு வழங்கும் உணவுப் பொருள்கள் வெளியில் கிடைக்கும் தொகையை விட அதிகமான விலைக்கே விற்கப்படுகின்றன. அத்துடன் அகதி முகாம்களில் புதிதாக பிறந்த குழந்தைகளை பதிய முடியாது என்று புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு உத்தரவு பிறப்பித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## இ. தொ. காவின் மாதர் மாநாடு

(கொழும்பு)

உல்லாச கிராமிய தொழில் துறைஅமைச்சருமஇ.தொ.கா தலைவருமான எஸ்.தொண்டமானும் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் எம். எஸ். செல்லச்சாமி அவர்களும் கலந்துகொள்ளும் ஊவா இ. தொ. கா. மாதர் மாநாடு எதிர்வரும் மே மாதம் 17ஆம் திகதி பதுளை பீரிஸ் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தோட்டங்கள் தனியார் மயம், மாதச்சம்பளம், பிரசவ சகாயம், வேலையில்லாத் திண்டாட்டம் என்பன பற்றி இம்மாநாட்டில் முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட உள்ளதாக மாதர் சங்கத் தலைவி திருமதி மனோன்மணி ராஜேந்திரன் தெரிவித்தார்.

## இந்து இளைஞர் பேரவை சந்திப்பு

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணம் வந்திருக்கும் பௌத்த மதகுருமார் நல்லெண்ணத்தூதுக் குழுவினரை யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவையினர் நேற்றுமுன்தினம்மாலை7.30மணியளவில் யாழ். சுபாஸ் விடுதியில் சந்தித்து உரையாடிப் பேரவையின் சார்பில் பேரவைப் பொதுச் செயலாளர் திரு. சி. சி. வரதராசாவும் உறுப்பினர் க. லோகேஸ்வரனும் மகஜரைக் கையளித்தனர். (24)

## பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் முடிவுகளை முழுதாக செயற்படுத்த அரசு உறுதி

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் பாராளுமன்றத் தீர்வுக் குழு வெளிப்படுத்தும் எந்த முடிவையும் அரசுமுற்றுமுழுதாகச் செயற்படுத்தும் என்று அரசின் சார்பில் தான் வாக்குறுதி தருவதாக ஜனாதிபதி ஆர். பிரமேதாசா சிறி ஜெயவர்த்தனபுர பாராளுமன்ற வளாகத்தின் பத்தாவது வருட நிறைவு விழாவில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும் போது கூறினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்கு அரசு தீர்வொன்றைக் காண்பதற்கு பாராளுமன்றத் தெரிவுக்குழு தீர்வுத்திட்டம் ஒன்றை இவ்வருட இறுதிக்குள் முன்வைக்கும் என்பதை என் உள்ளுணர்வு உணர்த்தியது. எனது உள்ளுணர்வு உண்மையாகுமோ இல்லையோ எனக்குத் தெரியாது என்றார்.

ஒருதலைப் பட்சமான முடிவுகளை மேற்கொண்டால் முன்புபோல் தாக்கங்களும், எதிர்த் தாக்கங்களும் ஏற்படும். ஒருதலைப் பட்சமான முடிவை எடுப்பதில் எமக்கு நாட்டமில்லை இந்த வருட இறுதிக்குள் தீர்வொன்றை நடைமுறைப்படுத்த உதவும் வகையில் பாராளுமன்றத் தெரிவுக் குழு தீர்வொன்றை முன்வைக்கும் என்பதில் எனக்கு நம்பிக்கையுண்டு. பிரச்சினை முழு நாட்டையும் பாதித்து வருவதால், வடக்கு கிழக்குப் பிரச்சினைக்கு முடிவான தீர்வொன்றைக் காண வேண்டும் என்றார்.

## பாராளுமன்ற வளாகத்தின் பத்தாண்டுநிறைவுவைபவம் - எதிர்க்கட்சிகள் புறக்கணிப்பு

(கொழும்பு)

பாராளுமன்ற சம்பிரதாயங்களிலும் நடைமுறைகளிலும் நம்பிக்கையற்றவர்கள் சிறி ஜெயவர்த்தனபுர பாராளுமன்ற வளாகத்தின்பத்தாவது வருட நிறைவு விழாவைஎடுத்ததால் எமது கட்சி அந்த நிகழ்ச்சியைப் பகிஷ்கரித்தது என்றார் மகாஜன எக்ஸத் பெரமுனைத்தலைவர்டினேஷ் குணவர்தனா, இந்த வளாகத்தைப் பெரும் செலவில் கட்டியது மக்களுக்குப் பெரும் சுமையுமாகும் என்றார் அவர்.

கட்சியின் முடிவுக்கு அமையச் சிறிலங்கா சுதந்திரக் கட்சி பாராளுமன்ற வளாகத்தின் பத்தாவது வருட நிறைவு விழாவில் கலந்து கொள்வதைத் தவிர்த்துக் கொண்டது என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்தார்.

## தெரிவு செய்யப்பட்ட அரசைக் கவிழ்க்க முடியாது -ஜே. ஆர். ஜெயவர்தனா

( கொழும்பு )

மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசைப் பலாத்காரத்தால் கவிழ்க்க முடியாது என்பது எனது திடமானநம்பிக்கையாகும். அரசைப் பலாத்காரத்தால் கவிழ்க்க இரு தடவைகள் முயற்சித்தும் கைகூடவில்லை என்று சிறிஜெயவர்தனபுர பாராளுமன்ற வளாகத்தில் 10-வது வருட நிறைவு விழாவில் கலந்து கொண்டு பேசிய முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்தனா கூறினார்.

இனிமேலும் பலாத்காரத்தால் அரசைக் கவிழ்க்கும் முயற்சிகள் வெற்றியளிக்காது என்றார் அவர். இவ் விழாவில் பிரதம விருந்தினராக ஜனாதிபதி ஆர். பிரேமதாசா கலந்து கொண்டார்.

## நாட்டைவிட்டு ஓடமாட்டேன் உடுகம்பொல தெரிவிப்பு

(கொழும்பு)

நான் நாட்டைவிட்டுஎந்தச் சந்தர்ப்பத்திலும் தப்பியோடப்போவதில்லை என்று முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரேமதாஸ உடுகம்பொல ராவய பத்திரிகைக்குக் கடித மூலம் தெரிவித்திருக்கிறார்.

லியனாராச்சி கொலை வழக்கில் இவர் அவசர காலச் சட்டத்தின் கீழ் பொலிசாரால் தேடப்பட்டு வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

நான் நாட்டை விட்டு ஓடினால் என்னால் சத்தியக்கடதாசி மூலம் வெளிப்படுத்தப்பட்ட உண்மைகள் இருட்டடிப்புச் செய்து விடப்படும் உலக மனித நேய ஸ்தாபனங்களும் சிறிலங்காவில் உள்ள அரச சார்பற்ற நிறுவனங்களும் உத்தரவாதமளித்தால் நான் முன்வந்து உண்மைகளைத் தெரிவிப்பதற்குத் தயாராக இருப்பதாக அவர் அக்கடிதத்தில் தெரிவித்துள்ளார்,

ஜனாதிபதி தேர்தல் காலங்களில் நடந்த ஊழல் அனைத்துக்கும் கண்கண்ட சாட்சியாக நான் இருக்கிறேன். கரும்பூனைகள்என்னை எந்நேரமும் வேட்டையாடலாம் என்றும் உண்மையை வெளியில் கொணர உதவிய எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கும், ஏனைய எதிர்க்கட்சிகளுக்கும் மற்றும் உண்மையாகவும் நேர்மையாகவும் உழைக்கும் பொலிஸ் அதிகாரிகளுக்கும் அவர்கடிதத்தில் நன்றி கூறியிருக்கிறார்.

# தமிழ்மக்களை விடிவுநோக்கி வழிநடத்திய தந்தைசெல்வா

-வண. பிதா. ஜெயக்குமார்

(யாழ்ப்பாணம்)

''தமிழ் மக்களை வழிநடத்துகிறோம் என்று கூறிய பல்வேறு தமிழ்த் தலைவர்கள், சிங்கள ஆட்சியாளரது அடிவருடிகளாக செயற்பட்ட காலத்தில் தமிழ் மக்களின் விடிவுக்காக தமிழ் மக்களை வழிநடாத்த முன்வந்தவர் தந்தை செல்வா'' இவ்வாறு நேற்று மாலை நல்லூர் கந்தசுவாமி ஆலய மைதானத்தில் அமரர் தந்தை செல்வாவின் 15 ஆவது ஆண்டு நினைவாக நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய வண. பிதா அ ஜெயக்குமார் அவர்கள் கூறினார். அவர் தொடர்ந்து உரைநிகழ்த்தும் போது அமரர் ''தந்தை செல்வா எமது சுதந்திரத்திற்காகவும், தமிழீழ விடுதலைக்காகவும் 1948 ஆம் ஆண்டே குரல் கொடுத்தவர் என்றார். 1948 ஆம் ஆண்டு இலங்கையின் சுதந்திர தினத்தின் போது தந்தை செல்வா பேசிய பேச்சை ஞாபகமூட்டினார்!'' சிங்களவர்களுக்கு சுதந்திரம் கிடைத்து விட்டது இனி தமிழ் மக்களுக்கு சுதந்திரம் கிடைக்க வேண்டும். அதற்காக நாம் பாடுபடுவோம்'' என்று அறை கூவல் விடுத்தார். இன்று தமிழ் மக்கள் தாம் தமிழர் என்று மார்பு தட்டி நிற்கிறார்கள் என்றால் இன்று தமிழ் மக்களை வழிநடாத்தும் போராளிகளை நினைவு படுத்துகின்றோம். இந்த தமிழ்ப் போராளிகளுக்கு ஆசானாக தந்தை செல்வா இருந்தார், என்று கூட நாம் கூறலாம் என்றும் அவர் தமது உரையில் தெரிவித்தார்.

## தந்தை செல்வா நினைவு மாபெரும் அஞ்சலிக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அமரர் தந்தை செல்வநாயகம் அவர்களது 15ஆவது ஆண்டு நிறைவு நினைவாக நேற்று மாபெரும் அஞ்சலிக்கூட்டமும் அஞ்சலி நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

நேற்றுக் காலை 8 30 மணியளவில் யாழ் கோட்டைப் பகுதியில் உள்ள தந்தை செல்வாவின் நினைவுத் தூபிக்கு மலர் அஞ்சலி செலுத்தப் பட்டது.

மாலையில் நல்லூர் கந்தசுவாமி ஆலய முன்றலில் விசேடமாக அமைக்கப்பட்ட மேடையில் மாபெரும் நினைவஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது.

ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்ட இவ் அஞ்சலிக் கூட்டத்தில் பல பிரமுகர்கள் அஞ்சலி உரை நிகழ்த்தினர். மாலை5 00மணியளவில் கூட்டம் ஆரம்பமானதும் மங்கள இசை முழங்கியது. திரு. கணபதிப்பிள்ளை இக்கூட்டத்திற்கு தலைமை தாங்கினார். இதில் திரு. ஆ. தர்மரட்ணம் வணக்கத்துக்குரிய பிதா அ. ஜெயக்குமார், புலவர் வேல் மாறன். வைத்தியக் கலாநிதி திலகவதி கோபாலரட்ணம். திரு. கோடீஸ்வரன், செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, திரு. நாகபத்மநாதன் ஆகியோரும் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பிரமுகர்களான திரு. வஞ்சிநாதன் திரு பரா மற்றும் விடுதலைப் புலிகள் மக்கள்முன்னணிச் செயலாளர் திரு. யோகி ஆகியோரும் அஞ்சலி உரை நிகழ்த்தினார்கள்.

இவர்களது அஞ்சலி உரைகளைத் தொடர்ந்து சில கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (க)

## கடற்படை நடமாட்டம்

குடாநாட்டின் தென்பகுதிக் கடலில் சிறிலங்கா கடற்படையின் பாரிய கப்பல் ஒன்று கடந்த வியாழன் முதல் நிறுத்தி வைக்கப் பட்டிருப்பதாக மீனவர்கள் தெரிவித்தனர்.

அதேவேளை நேற்று முன் தினம் இரவு குடாக்கடல் பிரதேசத்தில் விசைப்படகுகளின் நடமாட்டம் அதிகமாகக் காணப்பட்டதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இதன் காரணமாக மீன்பிடித் தொழில் பாதிக்கப் பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப் படுகிறது. (21)

## தென் தமிழீழ கிராமங்களில் தமிழ் மக்கள் விரட்டியடிப்பு

(திருக்கோணமலை)

தென் தமிழீழத்தில் இராணுவ நடவடிக்கை என்ற பெயரில் கடந்த மூன்று மாதங்களில் 12 கிராமங்களில் மக்கள் அங்கிருந்து விரட்டியடிக்கப் பட்டுள்ளனர். விரட்டியடிக்கப்பட்ட பின்னர் மூன்று கிராமங்களில் சிங்களவரும், முஸ்லிம்களும் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை திருக்கோணமலை மாவட்டம் முதலிக்குளம் பகுதியில் கடந்த மூன்று தினங்களாக இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

தமிழர் தற்போதுவாழும் பிரதேசங்களில் நுழைவதற்கு சிறிலங்கா இராணுவத்தினர் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### புதிய

பாளர் திரு. இளம்பருதி, 'விடுதலைப் புலிகள்' பத்திரிகை ஆசிரியர் ரவி திருமதி. அடேல் பாலசிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## மாணவர்கள் சமூகம் தரவும்

சகல பாடசாலைகளிலுமுள்ள சாரணர், செஞ்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையினர், லியோ கிளப், இன்ரறக்ற் கிளப் ஆகிய அனைத்துக் கழகங்களிலும் பங்கு கொள்ளும் மாணவ-மாணவிகள் நாளை 28 ஆம் திகதி மாலை 4.00 மணியளவில் யாழ். இந்து குமாரசாமி மண்டபத்தில் சமுகம் தருமாறு யாழ். கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளரின் செய்திக்குறிப்புக் கோருகிறது.

யாழ் கோட்டப்பாடசாலை மாணவர் கழகங்களுக்கான மே தின ஒழுங்குகள் குறித்து இக் கூட்டத்தில் ஆலோசிக்கப்படவுள்ளன.

### யாழ் மக்கள்

பத்திரிகையாளரைக் கூட்டி தமிழ் மக்களின் பிரச்சினையைப் பற்றியும் விடுதலைப் புலிகளின் நிலைப்பாடுகளை பற்றியும் எடுத்து விளக்கப் போவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

### மாந்தையில்

இராணுவம் பிற்பகல் 2.00 மணியளவில் முகாமிற்குள் திரும்பியோடிவிட்டது.

இராணுவம் பின்வாங்கியதையடுத்து நறுவிலிக்குளம் மாதிரிக் கிராமம், நானாட்டான் இராணுவமுகாம்களிலிருந்து சிறிலங்கா இராணுவத்தினர் பலத்த எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

### வீரச்சாவு

புங்குடுதீவு) வீரச்சாவைத் தழுவிக் கொண்டார். இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

## ''வள்ளுவர் வழியில் வீரம், மானம்'' உயரிய கொள்கைகளை வெளிக்காட்டும் நூல்

''எமது தாயக விடுதலைப் போராட்டத்தில் நாம் பின்பற்றும் வீரம், மானம் போன்ற உயரிய கொள்கைகளை வெளிப்படுத்துவதாகவும், அவற்றின் சிறப்புக்களை காலவோட்டத்திற்கு ஏற்ற வகையில் வெளிக் கொண்டு வருவதாகவும் இந்த நூல் படைக்கப்பட்டிருக்கிறது.''

இவ்வாறு நேற்று யாழ். இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெற்ற 'வள்ளுவன் வழியில் வீரம், மானம்'' என்ற நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணிச் செயலதிபர் திரு. யோகி கூறினார்.

திரு. க. சொக்கலிங்கம் தலைமையில் ஆரம்பமான இவ் விழாவில் விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை அவர்கள் மேற்படி நூலை வெளியிட்டு வைத்து வெளியீட்டு உரை நிகழ்த்தினார். தொடர்ந்து விடுதலைப்புலிகளின் நிதிப் பொறுப்பாளர் திரு. தமிழேந்தி, திரு. பரந்தாமன், செல்வி சுதாமதி ஆகியோர் உரை நிகழ்த்தினர். இறுதியாக மேற்படி நூலின் ஆசிரியர் திரு. நாக. பத்மநாதன் அவர்கள் ஆசிரியர் உரை நிகழ்த்தினார். (பா)

## ஆப். தலைநகர் காபூலில் கிளர்ச்சிக் குழுக்கள் மோதல்

ஆப்கானிஸ்தானின் தலைநகரான காபூலில் போட்டி முஜாஹிதீன் போராளிக் குழுக்களிடையே யுத்தம் நடந்து கொண்டிருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

வடக்கு முஜாஹிதீன் தளபதி அகமெட்ஷா மஸூத்தின்படைகள் குல்பதீன் ஹெக்மட்டியார் தலைவரான ஹெக்மட்டியார் தலைமையிலான போட்டிக் குழுவினரிடமிருந்து ஜனாதிபதி மாளிகையைக் கைப்பற்றி விட்டதாகக் காபூலில் இருந்து வரும் ஏஜென்சிச் செய்தியொன்று கூறுகிறது. நேற்றுச் சுமார் இரண்டு மணி நேரச் சண்டையின் பின் ஜனாதிபதி மாளிகை கைப்பற்றப் பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளை ஆப்கான் வானொலி, தொலைக்காட்சி என்பனவற்றில் வாசிக்கப் பட்ட ஓர் அறிக்கை அகமட்ஷா மஸூத் இப்போது அந்த நாட்டின் பாதுகாப்பு அமைச்சர் எனவும் காபூலில் உள்ள அனைவரும் அவரது உத்தரவிற்கு அடிபணிய வேண்டும் எனவும் தெரிவித்தது.


## மரண அறிவித்தல்கள்

### திருமதி கணபதிப்பிள்ளை ஐயர் விசாலாட்சிஅம்மா

திருக்கோணமலை சாம்பல்தீவில் வசித்தவரான திருமதி கணபதிப்பிள்ளை ஐயர் விசாலாட்சியம்மா அவர்கள் 24-04-1992 சனிக்கிழமை சுகயீனம் காரணமாக யாழ். ஆஸ்பத்திரியில் காலமானார். அன்னார் காலஞ்சென்ற திரு. கணபதிப்பிள்ளை ஐயர் அவர்களின் அன்பு மனைவியும், திரு. கந்தசாமி [சாம்பல் தீவு] திருமதி க. இராஜேஸ்வரி [மாணிக்கம்மா] ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி கந்தசாமி சிவயோகத்தின் அன்பு மாமியாரும், சிவகுமார் [போராளி கலைவாணன்], உதயகுமார் [போராளி எல்லாளன்], நந்தகுமார் [சிறிராம் மாவீரர்], ஜெயசுதா மற்றும் க. சாந்தினி [ஆசிரியை, சாம்பல்தீவு தமிழ் மகாவித்தியாலயம்], சதானந்தன், வசந்தினி, ஜெயந்தினி, குமுதினி, சிவகணேசன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இருபாலை பழம் றோட்டிலுள்ள க. சோமசுந்தரம் [அதிபர், குரும்பசிட்டி] அவர்களின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இருபாலை இந்துமயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல் :

[சி/4335] ச. சிவகுமார். [பேரன்]

### திருமதி தவமலர் பஞ்சலிங்கம்

கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற பஞ்சலிங்கம் அவர்களின் அன்பு மனைவியாகிய தவமலர் 26 04. 92 அன்று காலமானார் இவர் வசந்தா, ரவி (சவூதி) ஜெயா (காங்கேசன் சீமெந்து ஆலை). ரஞ்சன் (துர்க்கா பேக்கறி) லிங்கன் (மஸ்கன்ஸ் தொழிற்சாலை) சதீஸ். சுதா, ஜனா, வனா (மதுமிதா ஆகியோரின் அன்புத் தாயாரும், கிருபானந்தன். திலகேஸ்வரி புஸ்பா, நித்தியலே ஜினி ஆகியோரின் அன்பு மாமியாரும், செல்வரத்தினம், சற்குணம், பாக்கியலட்சுமியின் அன்புச் சகோதரியும், சுஜீவன், சஜீவன், நிரோஷன், டினோஜன், வானதி, அஜித்தன், யசீதா, சுஜந்தன், தர்ஷா, கரிதரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் [27.04.92] இன்று திங்கள் மாலை 4.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உடையார் ஒழுங்கை, தகவல்:
கொக்குவில் கிழக்கு, குடும்பத்தினர்
கொக்குவில். (2509)



எமது வாடிக்கையாளர்களுக்கு ஓர் நற்செய்தி !

இப்பொழுது எங்கள் ஸ்தாபனத்தில் சகல வகையான ஐஸ்கிறீம் மற்றும் குளிர்பானங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

ராஜா கிறீம் ஹவுஸ்
இல 36, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(2508)



கடற்புலிகளால் நடாத்தப்படும்
மாபெரும் கடல்
விளையாட்டுப் போட்டி

மேற்படி போட்டிகள் மே 4ஆம் 5ஆம் திகதிகளில் இடம்பெறும்

மேலதிக விபரங்களுக்கு
மாதகல், குருநகர், தாளையடி.
வல்வெட்டித்துறை கடல் புலிகள்
அரசியற் பிரிவு செயலகத்துடன்
25-04-92 க்கும் 30-04-92 க்கும் இடையில்
தொடர்பு கொள்ளவும்

விளையாட்டுத்துறை
கடற்புலிகள்

(சி/4328)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31-ம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.